**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவான கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கான அடிப்படை கொடுப்பனவு, வரியற்ற வருமானமாக திணைக்களத்தால் 2003.04.00 என்ற வருமான குறியீட்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வாறு வழங்கப்பட்ட சகல மோட்டார் சைக்கிள்களும் 2020 ஆம் ஆண்டின் இறுதிவரையில் உரிய உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட உரித்துக்கு கையளித்து பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ஆரம்ப கொடுப்பனவாக ரூபா 909,850 தேறிய வருமானம் 2022 ஆம் ஆண்டில் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் உரிய வரவு | இந்த பிரச்சினைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்காக தனித்தனியாக நிறுவன தலைவர்கள்/ மாவட்ட செயலகங்களில் பரீட்சிப்பதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவாக இருந்தமையால் முறையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை மேற்கொண்டு மேலும் நிலுவை வருமானம் காணப்படுமாயின் அவற்றை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலவு திட்ட முன்மொழிவை அமுல்படுத்தி பூர்த்தி செய்திருந்த போதும், அதற்குரிய முறையான அங்கீகாரம் வழங்கி கணக்கீடு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 06 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதம் முதல் 70 சதவீதத்திற்கு இடையிலான வீச்சிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்டுகின்ற சீரற்ற மற்றும் எதிர்பார்க்கப்படாத பொருளாதார நிலைமையில் அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் அதிக செலவின கட்டுப்பாட்டிற்காக தேறிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இற்கு இணங்க திட்டமிடப்பட்ட பணிகளில் முன்னுரிமை அளித்தல்/ சில செலவினங்களை காலம் தாழ்த்துதல், நிதி குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய திகதியை மாற்றியதன் காரணமாக குத்தகை தவணைப் பணம் மற்றும் வட்டி செலுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை, வரவு செலவு திட்டம் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் ஆதன கடன் பெற்ற உத்தியோகத்தர்கள் பின்னர் இடம் மாற்றலாகி சென்றமை, ஆரம்பித்தில் கொள்வனவுகள் திட்டமிடப்பட்ட பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவுகள் கைவிட்டமையால் கட்டுநிதி | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின விடயத்திற்காக சாத்தியமான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ளலில் உள்ள வசதியீனத்தின் அடிப்படையில் செலவினங்களில் அதிக கட்டுப்பாட்டை செய்வதற்கு உள்ளக ரீதியில் ஆலோசனைகள் வழங்கியதன் காரணமாக இவ்வாறு நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | |

## 2.3 முற்பண கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 செப்டம்பர் 23 ஆம் திகதி முதல் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 150,119 கடன் மீதி 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார நிலைமை அதிக வீழ்ச்சி மட்டத்தில் காணப்படுகின்றதாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், இவருடன் பல சந்தர்ப்பங்களின் போது கலந்துரையாடியதன் காரணமாக கடன் தவணை பணமாக செலுத்துவதற்கு இணங்கியிருந்தார். அதன் பிரகாரம் ரூபா 5,000 வீதம் 03 தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2022 அரச நிதி சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி மற்றும் 2018 இன் 19 ஆம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், தேசிய வரவு செலவுத்திட்ட | தற்போது வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க்பபட்டிருக்க வில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் மூன்றாவது பட்டோலையின் கீழ் வருகின்ற முற்பண பணிகளுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே விபரம் குறிப்பிடப்படுகின்ற எல்லை திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் பின்பற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டது. சட்டத்தின் 8(1)(ஆ) பிரிவின் பிரகாரம் 2023 மே 31 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அந்த எல்லை திருத்த வேண்டியிருந்த போதும், 2022 மே 19 ஆம் திகதி வரையிலும் அந்த எல்லை திருத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | அரசங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு 02 முற்பண பணிகளுக்குரிய ஆகக் கூடிய செலவின எல்லையின் கூட்டு மொத்தம் ரூபா 602,888 இனால் விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்தால் எல்லையினை திருத்துவற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதி திறைசேரி அச்சிடல் குறிப்புகளில் விடய இலக்கம் 25301 மற்றும் 32201 செலவினத்தில் இந்த எல்லை விஞ்சி பிழைகள் சரி செய்தலாக அறிக்கையிடப்பட்டிருந்தமையும், அதற்கான எல்லை திருத்தங்கள் தேவையற்று இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீட்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எல்லையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விடய இலக்கம் 31002 – அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலை முற்பண கணக்கின் ஆகக் கூடிய செலவின எல்லை ரூபா 76,900,472 இனால் விஞ்சி ரூபா 196,900,472 செலவிடப்பட்டிருந்தது. | உரிய எல்லையை திருத்துவதற்கான முன்மொழிவு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு 2023.04.24 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் கையொப்பத்துடன் அந்த முன்மொழிவு 2023.05.25 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீட்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எல்லையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்ற 117 நிறுவனங்களுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் அல்லது செயல் நடவடிக்கை செயற்பாடுகளின் 2022 | நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலையின் இடையே பொது துறைகளின் உத்தியோகத்தர்களை வரவழைத்து நிறுவனங்களின் செயல் முன்னேற்றத்தை மேற்பார்வை | திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு கொண்டுவந்து நிறுவனங்களின் மேற்பார்வை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | |
|---|---|
| திசெம்பர் 31 இல் உள்ளவாரான செயலாற்றலுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வரையரையாக இருந்தமையினால் இணைய வழி ஊடாக மற்றும் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும், உத்தியோகத்தர்களை வரவழைத்து கவனத்தில் கொள்ளக்கூடிய நிறுவனங்கள் அளவில் செயலாற்றல் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதில் தாமதம் தொடர்பாக அமைச்சரவையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் அந்த நிறுவனங்களின் வரிசை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிப்பதற்கும் அவ்வாறே திறைசேரி பிரதிநிதிக்கும் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.2 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி வேலை இழந்தவர்களுக்கு உதவி வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி வேலை இழக்கப்பட்ட நிரந்தர வாழ்வாதரம் இன்றிய வயது 65 பூர்த்தி செய்த நபர்களுக்கு உதவி வழங்குவதற்காக படியொன்றை வழங்குவதற்கு வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் 2013 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை | 2013 ஆம் ஆண்டிற்கான இந்த வரவு செலவு திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு ஒரே தடவையில் முன்னால் இருந்த நிதி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு மற்றும் தொழிற்சங்கங்களுடன் முன்னால் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வெளிப்படுத்தப்பட்ட | வரவு செலவு திட்ட முன்மொழிவுகளில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய முறையான திட்டம் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| மாதம் ஒன்றுக்கு ரூபா 5,000 வீதமும் 2015 சனவரி 01 ஆம் திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரை மாதத்திற்கு ரூபா 6,000 வீதமும், 2015 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் ஒரே தடவையில் மாத்திரம் செலுத்தப்படுகின்ற ரூபா 250,000 படியும் வழங்குவதற்கு வரவு செலவு திட்ட முன்மொழிவு அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், திணைக்களம் இதற்காக உரித்துடையவர்களை குறிப்பாக இனங்கண்டிருக்கவில்லை. இந்த நிலைமை தொடர்ச்சியாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டபபட்ட போதிலும், அது தொடர்பாக இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டின் போது 69 நலனாளிகளுக்காக ஒரே தடவையில் மாத்திரம் செலுத்தப்படுகின்ற படியான ரூபா 250,000 வீதம் ரூபா 17,250,000 பெறுமதியுடைய தொகை செலுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. | தகவல்களாக இருந்ததுடன், அதன் பிரகாரம் 1980 யூலை வேலை நிறுத்தத்தில் வேலைகளை இழந்த நிரந்தர வாழ்வாதாரம் இன்றிய 10,000 அளவிலான தரப்பினர் இருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலுத்தும் பொது 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி வேலை இழந்தவர்களின் கோரிக்கை, பிரதேச செயலகத்தினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையாகக் கொண்டு முன்னால் இந்த ஊழியர்கள் சேவையாற்றிய விடயப் பொறுப்பு அமைச்சான தொழில் மற்றும் போக்குவரத்து கைத்தொழில் மற்றும் வீடமைப்பு என்ற அமைச்சுக்களின் பரிந்துரையின் பிரகாரம் மேற்கொள்ளல் நியாயமான முறையாகும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 யூலை 28 ஆம் திகதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பின் 2021 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 50 நோயாளர் காவும் வண்டிகள், 52 தண்ணீர் பௌஸர்கள் மற்றும் 62 டபள் கப் வண்டிகள் என்பன நிதிக் குத்தகை முறையின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும், இந்த வாகனங்கள் 164 இறக்குமதி | இந்த கொள்வனவு செய்யப்பட்ட 164 வாகனங்களில் 76 வாகனங்கள் 2021 ஆம் ஆண்டின் போதும், 88 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் போதும் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் | சரியான எண்ணக்கரு மற்றும் வெளிப்படுத்தல் எண்ணக்கருவின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் 76 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 51 வாகனங்கள் தேவையான நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| வாகன வகை | 2021 ஆம் ஆண்டில் | | 2022 ஆம் ஆண்டில் | |
|---|---|---|---|---|
| | பதிவினை பூர்த்திசெய்த வாகனங்களின் எண்ணிக்கை | நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட காலப் பகுதி | பதிவினை பூர்த்திசெய்த வாகனங்களின் எண்ணிக்கை | நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட காலப் பகுதி |
| நோயாளர் காவும் வண்டி | 25 | 00 | 25 | 50 |
| கெப் வண்டி | 51 | 51 | 11 | 11 |
| தண்ணீர் பௌஸர் | 00 | 00 | 52 | 52 |
| | 76 | 51 | 88 | 113 |

மேலும், யதார்த்த எண்ணக்கருவின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது சட்ட ரீதியான விடயங்களாக இருந்த போதும் சொத்துக்கள் பொருளாதார நலன்களை வழங்குமாயின் அது பிரயோக ரீதியில் அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தல் எண்ணக்கருவின் பிரகாரம் நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கும் போது உரிய காலப் பகுதிக்குரிய சகல தகவல்கள், நிதி அறிக்கை பயன்படுத்துகின்ற தரப்பினருக்கு வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும், இந்த 164 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,693,839,615 தொகை 2022 ஆம் ஆண்டின் நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போது 51 வாகனங்கள் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது 113 வாகனங்கள் உரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தும் நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமைகளை கவனத்தில் கொண்டு அந்த வாகனம் 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்ட போதும், 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் இதில் போதியளவான தாக்கமொன்று ஏற்பட்டமை காணப்படவில்லை.

(ஆ) திணைக்களத்தால் வாகனங்கள் தேவையான நிறுவனங்களுக்கு அந்த வாகனங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும், 15 நிறுவனங்களினால் அந்த வாகனங்கள் கையேற்கப்பட்டமைக்கான எழுத்து மூல சான்றுகளேனும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

வாகனங்களை கையேற்ற அநேகமான நிறுவனங்களால் வாகனங்களை கையேற்கும் சந்தர்ப்பத்தின் போதும், சில நிறுவனங்கள் அதன் பின்னரும் வாகனங்களை

சொத்துக்களை கையளிக்கும் போது முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | | கையேற்றமைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது. |

**3.4 குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்புக்கள் செலவின விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் ஏனைய செலவின தலைப்பிற்கு தேசியய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவைகள் பொறுப்பு விடயங்களின் கீழ் மீண்டெழும் செலவினங்களுக்குரிய அமைச்சு, திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகங்களை உள்ளடக்கிய 81 நிறுவனங்களுக்கு உரிதாக விநியோகிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் கூட்டு மொத்தமாக ரூபா 23,424,731,937 ஆக இருந்த போதும், ACA-2(ஏ)(ii) படிவத்தில் அப்பெறுமதி ரூபா 23,092,547,937 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 332,184,000 இணக்கம் இன்மை காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்பு செலவின விடயத்தின் கீழாக விநியோகிக்கப்பட்ட நிதி ஏற்பாடு உரிய பிரகாரம் ACA படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ACA - 2(ஏ)(ii) மற்றும் ACA-2(ஏ)(iv) படிவத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்பு செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன நிதி ஏற்பாட்டின் பெறுமதி குறைநிரப்பு மதிப்பீட்டுடன் இணக்கும் செய்யும் போது நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட நிறுவனத்தில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | குறைநிரப்பு சேவை மற்றும் அவசர தேவை பொறுப்பு செலவின விடயத்தின் கீழ் மீண்டெழும் மற்றும் மூலதன நிதி ஏற்பாடுகளை கணக்கீடு செய்யும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| ACA-2ஏ(ii) படிவத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட நிறுவனம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் பிகாரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட நிறுவனம் | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு தொகை (ரூபா) | அதிகார இலக்கம் |
|---|---|---|---|
| ------------------ | ---------- | ----------- | --------- |
| மீண்மெழும் செலவினம் | | | |
| * வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 55,000,000 | 155 |
| * வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 314,312 | 175 |
| மூலதன செலவினம் | | | |
| * இலங்கை கடற்படை | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு | 486,000,000 | 260 |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (இ) குறைநிரப்பு மதிப்பீட்டு அதிகார இலக்கம் 123 இன் கீழ் மீண்டெழும் நிதி ஏற்பாடு ரூபா 3,000,000 மற்றும் மூலதன நிதி ஏற்பாடு ரூபா 5,000,000 ஆக வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், நிதிக் கூற்றுக்களில் ACA-2(ஏ)(ii) மற்றும் ACA-2(ஏ)(iv) படிவத்திற்கு இடையே மீண்டெழும் நிதி ஏற்பாடு ரூபா 5,000,000 ஆகவும், மூலதன நிதி ஏற்பாடு ரூபா 3,000,000 ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர தேவை பொறுப்பு செலவின் விடயத்தின் கீழ் மீண்டெழும் மற்றும் மூலதன நிதி ஏற்பாடுகளை கணக்கீடு செய்யும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.5 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் (இணைப்பு ii) குறிப்பிடப்பட்ட ஆண்டில் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் வருகின்ற புத்தகத்தில் பதிவழித்தல் மற்றும் அறவிடலின் கீழ் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் 03 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் ஒரு சந்தர்ப்பத்திற்குரிய அறவிடல் தொடர்பாக பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்களில் ஏற்பட்ட சகல இழப்புக்களும் காப்புறுதி மூலம் மீளளிப்பாக மேவுகை செய்யப்பட்டமையால் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் புத்தகத்தில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| திகதி | விபரம் | பழுதுபார்க்கப்பட்ட செலவினம் | அறவிடப்பட்ட பெறுமதி | அறவிடப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| ------ | ------ | ------ | ------ | ------ |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 2022.05.10 | NC-5410 வேன் வண்டிக்கு ஏற்பட்ட விபத்து | 42,000 | 42,000 | 2022.06.24 |
| 2022.07.01 | NC-5410 வேன் வண்டிக்கு ஏற்பட்ட விபத்து | 19,000 | 19,000 | 2023.01.26 |
| 2022.11.14 | NB-3230 வேன் வண்டிக்கு ஏற்பட்ட விபத்து | 39,700 | 39,700 | 2023.01.12 |

இருந்து பதிவழித்தல் 2022 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கையில் இடப்படவில்லை.

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவி அணியினர் தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையில் 08 பதவிகளும், இரண்டாம் நிலையில் 09 பதவிகளும், ஆரம்ப நிலையில் 06 பதவிகளும் ஆக கூட்டுமொத்தமாக வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆக காணப்பட்டது. | அதிக செலவின கட்டுப்பாடு மற்றும் ஆட்சேர்த்தல்/ வெற்றிடங்களை நிரப்புதல் கைவிடல் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட பல்வேறு ஆலோசனைகளும் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ பதவி அணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |